		அசல் மதிப்பீடு 1(ஏ)	இறுதி மதிப்பீடு 1(பை)	தொகை (ரூபா) 2(ஏ)	இறுதி வருமான மதிப்பீடு 2(பை)
2003.02.03	1968 ம் ஆண்டின் 32 ம் இலக்க ஆ.ப.செ சட்டத்திற்குரிய கட்டணம்	645,000,000	800,000,000	1,128,518,400	141

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூ

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டப்
	அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டெழும்	1,750,000,000	1,750,000,000	1,547,001,462	88.40
மூலதனம்	1,270,000,000	1,270,000,000	502,223,530	39.55

3.7 நிதி குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் ∴ திணைக்களங்களின் முகவராகஇத் திணைக்களத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

தொடர் இல	அமைச்சு / திணைக்களத்தில் இருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டு நோக்கம்	ஒதுக்கீடு		உண்மையான செலவீனம்	ஒதுக்கப்பட்ட இறுதி ஒதுக்கீட்டின் % பயன்பாடு
			அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
		உரியதொன்றல்ல				

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

ஆதன குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2023 திகதி கற்றாய்வுச் சபை அறிக்கையின் படி மீதி	31.12.2023 திகதி நிதி நிலைமைக் கூற்றின் படி மீதி	எதிர் காலத்தில் கணக்கிட வேண்டியது	அறிக்கையிடல் முன்னேற்றம் %
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	-	7,992,062.69	-	
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்	-	729,564,052.54	-	
9153	காணி	-	8,400,000.00	-	
9154	அருவமான சொத்துக்கள்	-	-	-	
9155	உயிரியல் சொத்துக்கள்	-	-	-	
9160	நடைபெறும் பணிகள்	-	-	-	
9180	குத்தகை சொத்துக்கள்	-	-	-	

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்

இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ளது.

04 ஆம் அத்தியாயம்

செயல் திறன் குறிகாட்டி

4.1. நிறுவனத்தின் செயலாற்றுகை குறிகாட்டி (செயல் திட்டத்தின் அடிப்படையில்)

விஷேட குறிகாட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மை வெளியீடு				
	>100%	100% - 90%	75% - 89%	50% - 74%	50% - 0%
தொழிற்பாட்டு செயற்பாடுகள்					
சாதாரண சேவையின் கீழ் கிடைக்கப்பெற்ற மொத்த விண்ணப்பங்கள்		✓			
சாதாரண சேவையின் கீழ் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகளின் எண்ணிக்கை			✓		
ஒருநாள் சேவையின் கீழ் கிடைக்கப்பெற்ற மொத்த விண்ணப்பங்கள்	✓				
ஒருநாள் சேவையின் கீழ் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகளின் எண்ணிக்கை	✓				
மனிதவள அபிவிருத்தி					
ஆளணிப் பயிற்சிகள்		✓			
உள்ளக கணக்காய்வு செயற்பாடுகள்					
உள்ளக கணக்காய்வுத் திட்டம்		✓			
மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்துதல்கள்					
கட்டிடங்களும் நிர்மாணிப்பும்			✓		
இயந்திரங்களும் பொறித்தொகுதியும்				✓	
வாகனம்					✓
மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்துதல்					
தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்		✓			
இயந்திரங்களும் பொறித்தொகுதியும்		✓			
வேறு மூலதனச் செலவுகள்					
கேள்வி நடைமுறைகளுக்குரிய முன்னாயத்தம்		✓			
வேறு			✓		

05 ஆம் அத்தியாயம்

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதற்கான செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

இலக்குகள் / நோக்கங்கள்	இலக்குகள்	வெற்றிச் சுட்டிகள்	இது வரை அடையப்பெற்ற வெற்றிகளின் முன்னேற்றம்		
			0% - 49%	50% - 74%	75% - 100%
நிலைபேறான அபிவிருத்திக்கு அமைதியான சமூகக் குழுக்களை ஊக்குவித்தல், சகலருக்கும் நியாயமான மற்றும் சட்டத்தின் பாதுகாப்பை நிலைநாட்டல், சகல மட்டங்களிலும் பொறுப்புக்கூறலையும் முழுமைத்தன்மையையும் நிறுவுதல்	சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பெயர் மற்றும் முகவரி உள்ளடக்கப்பட்ட தேசிய அடையாள அட்டையை வழங்குதல்	மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகளின் எண்ணிக்கை			✓
	கணினி முறையொன்றையும் லேசர் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி மிகவும் பாதுகாப்பான கூட்டிகை அட்டையாக தேசிய அடையாள அட்டையை விநியோகித்தல்	கணினி முறையொன்றையும் லேசர் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி மிகவும் பாதுகாப்பான கூட்டிகை அட்டையாக விநியோகிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகளின் எண்ணிக்கை			✓
	சர்வதேச சிவில் விமான சேவைகள் தரத்திற்கு அமைய புகைப்படம் எடுப்பதற்காக ICAO மென்பொருளை அறிமுகம் செய்தல்	ICAO மென்பொருளைப் பயன்படுத்தி சர்வதேச சிவில் விமான சேவைகள் தரத்திற்கு அமைய புகைப்படம் எடுப்பதற்கு பதிவுசெய்யப்பட்ட புகைப்படசாலைகளின் எண்ணிக்கை			✓
	பதிவாளர் நாயகத் திணைக்களத்தினால் திணைக்களத்துடன் இணைந்து செயற்படுத்தப்படும் புதிதாகப் பிறந்த பிள்ளைகளுக்கான இலங்கை அடையாள இலக்கத்தை (SLIN) வழங்குதல்	பதிவாளர் நாயகத் திணைக்களத்தினால் திணைக்களத்துடன் இணைந்து செயற்படுத்தப்படும் இலங்கை அடையாள இலக்கத்துடன் (SLIN) கூடிய பிறப்புச் சான்றிதழ்களின் எண்ணிக்கை			✓
	தேசியப் பாதுகாப்பு மற்றும் நாட்டின் அபிவிருத்தி செயன்முறைக்கு தகவல் பரிமாற்றம் செய்தல் மற்றும் அந்தத் தகவல்களை சரிபார்த்தல்	தேசியப் பாதுகாப்பு மற்றும் நாட்டின் அபிவிருத்தி செயன்முறைக்கு பறிமாற்றம் செய்யப்பட்ட தகவல்கள் மற்றும் மற்றும் சரிபார்க்கப்பட்ட தகவல்களின் அளவு			✓

5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான வெற்றிகளையும் சவால்களையும் சுருக்கமாக விபரிக்க.

வெற்றிகள் :

1. பிரதேச மட்டத்தில் அனைவருக்கும் இலகுவான மற்றும் நியாயமான முறையில் சேவைகளை பன்முகப்படுத்தி குருணாகல் மாகாண அலுவலகத்தை ஆரம்பித்து அங்கே ஒருநாள் சேவையை நடைமுறைப்படுத்தல் மற்றும் நுவரெலியா மாகாண அலுவலகத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை தயார்படுத்தல்.

2. தேசியப் பாதுகாப்பு மற்றும் நாட்டின் அபிவிருத்தி செயன்முறைக்கு ஆட்களின் தகவல்களை இணைய வழிமுறையைப் பயன்படுத்தி சரிபார்ப்பதன் மூலம் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு சமூகமளிக்கும் ஆட்களுக்கு வினைத்திறன்மிக்க மற்றும் நம்பகமான சேவையைப் பெற்றுக்கொள்ள முடியுமாதல்.

3. திணைக்களத்தின் அதிகமான பணிகளை இணைய வழியில் மேற்கொள்வதன் காரணமாக காகிதப் பாவனையைக் குறைத்து பாலைவனமாதல் செயன்முறையை தடுப்பதற்கு முனைப்புடன் பங்களிப்புச் செய்ய முடியுமாதல்.

4. இலங்கை முழுவதும் அமைந்துள்ள பிராந்திய அலுவலகங்களில் வேலை நிறைவுசெய்யப்பட்ட விண்ணப்பங்களை அஞ்சல் மூலம் பிரதான அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கும் போது அஞ்சல் செலவு அதிகமாக காணப்படுவதனால் திணைக்களத்திற்கு ஏற்படும் தாக்கத்தை தவிர்ப்பதற்கான தீர்வாக செலவைக் குறைக்கும் நோக்கில் தயாரிக்கப்பட்ட போக்குவரத்து திட்டத்திற்கு அமைய திணைக்கள வாகனமொன்றின் மூலம் வேலை நிறைவடைந்த விண்ணப்பங்கள் பிரதான அலுவலகத்திற்கு கொண்டுவரப்படுகின்றன. அதன் மூலம் 90% க்கும் மேலான செலவு நன்மை திணைக்களத்திற்கு கிடைத்துள்ளது.

5. மிகவும் சரியான மற்றும் பாதுகாப்பான தேசிய அடையாள அட்டையை அறிமுகம் செய்வதற்காக 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவுசெய்யும் சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டு தேவையான ஒழுங்கு விதிக் கோவையொன்றை தயாரிப்பதன் மூலம் மிகவும் வினைத்திறன்மிக்க சேவையை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தல்.

சவால்கள் :

1. திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணிகளால் தேசிய அடையாள அட்டைகளை அச்சிடுவதற்குத் தேவையான முன் அச்சிடப்பட்ட வெற்று அட்டைகள் கிடைக்கப்பெறாமை.

2. திணைக்களத்தில் நாளாந்தம் ஒன்றுசேரும் விண்ணப்பதாரிகளினால் மீண்டும் ஒப்படைக்கப்படும் பழைய மற்றும் மறுக்கப்பட்ட அடையாள அட்டைகள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்திக் பொருட்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதனால் அவற்றை சூழல் நேய மற்றும் பாதுகாப்பான முறையில் அழிக்கப்பட வேண்டியிருப்பதனாலும் அதற்கான வசதிகள் உள்ள நிறுவனங்கள் குறைவாக இருப்பதனாலும் சிரமங்களுக்கு உள்ளாதல்.

3. திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களின் வேலை நிறைவடைந்த விண்ணப்பங்களை பிரதான அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கும் போது அஞ்சல் செலவினம் மிக அதிகமாக காணப்படுவதனாலும் அதற்காக வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு பற்றாக்குறையாக உள்ள காரணத்தினாலும் திணைக்களத்தின் செலவு முகாமையின் போது தேவையற்ற அழுத்தம் ஏற்படல்.

06 ஆம் அத்தியாயம்
மனித வளத்தின் வடிவம

6.1. மனித வள முகாமைத்துவம்

	அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை	தற்போதையஊழியர் எண்ணிக்கை	வெற்றிடம் **
சிரேஷ்ட	31	25	6
மூன்றாம் நிலை	4	3	1
இரண்டாம் நிலை	1288	1,209	79
ஆரம்ப பிரிவு	153	106	47

6.2 **.நிறுவனத்தின் செயல் திறனுக்கான மனித வள பற்றாக்குறை அல்லது மேலதிகம் தாக்கம் செலுத்தும் முறை

திணைக்களத்தில் தற்போது காணப்படும் மனித வள பற்றாக்குறையானது நிறுவனத்தின் செயல்திறனிற்கு எதிர்மறை விளைவுகள் ஏற்படுவதனை தடுக்குமுகமாக சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவையாவன,

- மனித உழைப்பை குறைக்கும் வகையில்தேசிய அடையாள அட்டைகளை தயாரிப்பதற்காகஈடுபடுத்தப்படும் கணனி வலையமைப்பினை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- திணைக்கள உத்தியோகத்தர்களை மேலதிக நேர சேவைக்கு உட்படுத்துதல்.

அதன்படி, திணைக்களத்தில் தற்போது காணப்படும் ஊழியர் வெற்றிடங்கள்மேற்குறிப்பிட்ட முறையின் மூலம் முகாமை செய்யப்படுவதுடன் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய அதிகாரிகளிடம் தொடர்ந்தும் வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருகின்றன.

6.3. மனித வள முகாமைத்துவம்

தொ. இல	நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	பயிற்சியளிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதி	மொத்த முதலீடு (ரூ. 000) (உள்நாட்டு)	நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை	பிரதிபலன் / பெற்றுக்கொண்ட அறிவு *
1.	ஒருநாள் சேவை மற்றும் முன் அலுவலக கடமைகளின் வினைத்திறன் மற்றும் பயனுறுதியை அதிகரிப்பதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	30	½ நாள் வீதம் 2 நாட்கள்	6,480.00	உள்நாடு	அறிவு முகாமைத்துவத்திலுள்ள இடைவெளிகளை குறைத்தல், விணைத்திறனை அதிகரித்து ஒரு நாள் சேவைக்கு எடுக்கும் காலத்தை குறைத்தல் மற்றும் குறைபாடுகளை நிவர்த்திக்கும் கருத்திட்டத்திற்கான பிரவேசம்
2.	2023 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கான சேவை முன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	40	01 நாள்	15,400.00	உள்நாடு	திணைக்களத்திற்கு உடனடியாக இசைவாக்கம் அடைந்த புதிய உத்தியோகத்தர்கள் மற்றும் தொடர்ச்சியான வினைத்திறன்மிக்க பொதுமக்கள் சேவை
3.	பிரிவு மட்டத்தில் நடைபெறும் அறிவு முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - (அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில்)	213	½ நாள் வீதம் 9 நாட்கள்	25,820.00	உள்நாடு	அறிவு முகாமைத்துவத்திலுள்ள இடைவெளிகளை குறைத்தல், விணைத்திறனை அதிகரித்து ஒரு நாள் சேவைக்கு எடுக்கும் காலத்தை குறைத்தல் மற்றும் குறைபாடுகளை நிவர்த்திக்கும் கருத்திட்டத்திற்கான பிரவேசம்
4.	ஒய்வூதியம் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம்	3	02 நாட்கள்	28,500.00	உள்நாடு	உரிய உத்தியோகத்தர்களின் உயர் செயலாற்றுகை
5.	திணைக்கள உத்தியோகத்தர்களின் உளப்பாங்கு விருத்தி நிகழ்ச்சித்திட்டம்	261	01 நாள்	102,000.00	உள்நாடு	உள்ளக வாடிக்கையாளர் உபசரிப்பில் சாதகமான விருத்தி மற்றும் ஏற்புடைய உத்தியோகத்தர்களின் உயர் செயலாற்றுகை
6.	அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதி ஒழுங்கு விதிகள்	4	02 நாட்கள்	30,000.00	உள்நாடு	உரிய உத்தியோகத்தர்களின் உயர் செயலாற்றுகை
7.	அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் இணைய வழியில் (Zoom) நடத்தப்படும் 150 மணித்தியால இடைநிலை பாடநெறியின் வளவாளரின் கற்பித்தல் கொடுப்பனவு	109	150 மணித்தியாலங்கள்	112,500.00	உள்நாடு	அடையாள அட்டை தயாரிக்கும் செயன்முறையின் போது மற்றும் பொதுமக்கள் தொடர்பாடலின் போது தமிழ் மொழியில் காணப்படும் தடைகளை நீக்குதல். வினைத்திறன்காண் தடைதாண்டலில் சித்தியடைவதற்கான அறிவு

8.	கோவையிடல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	6	01 நாள்	30,000.00	உள்நாடு	உரிய உத்தியோகத்தர்களின் உயர் செயலாற்றுகை
9.	கணக்கீட்டு கடமைப்பொறுப்பு மற்றும் நடைமுறைப் பாவனை பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	2	02 நாட்கள்	20,000.00	உள்நாடு	உரிய உத்தியோகத்தர்களின் உயர் செயலாற்றுகை
10.	அலுவலக உபகரணங்கள் கட்டுப்பாடு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	02	02 நாட்கள்	15,000.00	உள்நாடு	உரிய உத்தியோகத்தர்களின் உயர் செயலாற்றுகை
11.	தனிநபர் கோவையொன்றை பேணிவரல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	02	02 நாட்கள்	19,000.00	உள்நாடு	உரிய உத்தியோகத்தர்களின் உயர் செயலாற்றுகை
12.	கிரபிக் வடிவமைப்பு மற்றும் பல்லூடக தொடர்பாடல் திறன்கள் பற்றிய பயிற்சிப் பாடநெறி	01	56 வாரங்கள்	30,750.00	உள்நாடு	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையின் புதிய அறிவு மற்றும் திறன் விருத்தி
13.	அரசாங்க பெறுகை நடவடிக்கை மற்றும் ஒப்பந்த நிர்வாகம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா பாடநெறி	01	14 மாதங்கள்	138,000.00	உள்நாடு	அறிவால் மேம்பட்ட உயர் முகாமைத்துவம் மற்றும் சரியான முறையில் பெறுகை செயன்முறையை வழிநடாத்தல்
14.	தரமான வேலைச் சூழலுக்கான அலுவலக உதவியாளர்களின் மற்றும் சாரதிகளின் தொழில் விருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	06	01 நாள்	30,000.00	உள்நாடு	உள்ளக மற்றும் வெளிவாரி வாடிக்கையாளர் உபசரிப்பில் சாதகமான விருத்தி
15.	குடியுரிமைச் சட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடத்திய வளவாளருக்கு கற்பித்தல் கொடுப்பனவு	220	½ நாள் வீதம் 2 நாட்கள	28,910.00 3,600.00	உள்நாடு	அடையாள அட்டை தயாரிக்கும் போது குடியுரிமைச் சான்றிதழை அடையாளம் காணல் மற்றும் உண்மைத்தன்மையை பரீட்சித்தல் பற்றிய அறிவு
16.	பெறுகை நடைமுறை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கொண்ட வளவாளருக்கான கொடுப்பனவு	66	01 நாள்	61,130.00 3,000.00	உள்நாடு	அறிவாற்றல் மிகுந்த உயர் முகாமைத்துவம்
17.	ஆவணங்களைப் பரீட்சிக்கும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	215	01 நாள்	38,820.00	உள்நாடு	அடையாள அட்டை தயாரிப்பு செயன்முறையில் காணப்படும் பிரச்சினைகள் குறைதல்
18.	Stores Management & Purchasing Procedures	05	02 நாட்கள்	47,500.00	உள்நாடு	அறிவாற்றல் மிகுந்த உயர் முகாமைத்தவம்
19.	பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் மற்றும் அதனோடு இணைந்த பணிகள் பற்றிய பயிற்சி	200	01 நாள்	26,310.00 3,200.00	உள்நாடு	அடையாள அட்டை தயாரிப்பு செயன்முறையில் காணப்படும் பிரச்சினைகள் குறைதல்

	நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்திய வளவாளருக்கான கொடுப்பனவு					
20.	புதிதாக நியமனம் பெற்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கான சேவை முன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	25	02 நாட்கள்	16,295.00	உள்நாடு	திணைக்களத்திற்கு துரிதமாக இசைவாக்கம் அடைந்த புதிய உத்தியோகத்தர்கள் மற்றும் தொடர்ச்சியான வினைத்திறன்மிக்க பொதுமக்கள் சேவை
21.	சிறாப்பர் / காசாளர் பதவியின் கடமைப் பொறுப்பு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	02	01 நாள்	12,000.00	உள்நாடு	விடயம் தொடர்பில் பூரண அறிவு மற்றும் ஆற்றல் ஊடாக மிகவும் வினைத்திறனுடன் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் திறன்
22.	போக்குவரத்து முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	02	02 நாட்கள்	12,000.00	உள்நாடு	விடயம் தொடர்பில் பூரண அறிவு மற்றும் வினைத்திறன்மிக்க அரச சேவை
23.	சம்பளப் பரிமாற்றம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	02	02 நாட்கள்	19,000.00	உள்நாடு	விடயம் தொடர்பில் பூரண அறிவு மற்றும் வினைத்திறன்மிக்க அரச சேவை
24.	தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் நடைமுறை ஒழுங்கு விதிகள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	02	02 நாட்கள்	19,000.00	உள்நாடு	அறிவாற்றல் மிகுந்த உயர் முகாமைத்தவம்
25.	அலுவலக உதவியாளர்கள் மற்றும் சாரதிகளின் உளப்பாங்கு விருத்தி மற்றும் தொழில் அறிவை விருத்திய செய்வதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	07	02 நாட்கள்	66,500.00	உள்நாடு	உள்ளங்கவர் அலுவலக சூழலொன்றை உருவாக்குவதற்கு வழிகாட்டல் மற்றும் அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன் விருத்தியுடன் கூடிய தொடர்ச்சியான வினைத்திறன்மிக்க அரச சேவை
26.	பிராந்திய அலுவலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நடத்தப்பட்ட பயிற்சி மற்றும் முன்னேற்ற மீளாய்வு நிகழ்ச்சித்திட்டம்	339	05 நாட்கள்	-	உள்நாடு	அடையாள அட்டை தயாரிப்புக்காக சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களை சரியாக தயாரிப்பதற்குத் தேவையான அறிவு விருத்தியினூடாக உயர் வினைத்திறன் மற்றும் பிரதேச ரீதியில் காணப்படும் பிரச்சினைகள் குறைதல்
27.	உற்பத்தி உதவியாளர் மற்றும் ஆவண உதவியாளர் தரம் II உத்தியோகத்தர்களுக்கான 2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான கொடுப்பனவை செலுத்தல்	11		34,180.00	உள்நாடு	

*** நிறுவனமொன்றினால் நிறைவேற்றிக்கொள்ள உத்தேசிக்கும் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவம்**

நிறுவனமொன்றினால் நிறைவேற்றிக்கொள்ள உத்தேசிக்கும் நோக்கங்களுக்கு முன்னால் நிறுவனத்தின் மனிதவளத்தை மிகவும் வினைத்திறன்மிக்கதாகவும் பயனுறுதிவாய்ந்ததாகவும் ஈடுபடுத்திக்கொள்வதற்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது முக்கியமாகும். இதன் போது சேவை நாடுநரின் அறிவு விருத்தி (கற்றல்) ஏற்படுவதோடு, இந்த அறிவு விருத்தியின் பயனாக உண்மையிலேயே தனது தொழிலின் வெற்றியை அடைந்துகொள்வதற்கான அறிவு, ஆற்றல் மற்றும் உளப்பாங்கு என்பன விருத்தியடையும்.

அதற்கிணங்க, சேவை நாடுநரின் அறிவு, ஆற்றல் மற்றும் உளப்பாங்கு விருத்தி அடைவதன் மூலம் ஊழியரின் ஆற்றல்கள் நேரடியாக விருத்தியடையும். ஆற்றல்கள் அதிகரிக்கும் போது ஊழியரின் சுய அபிமானம், சுய நம்பிக்கை மற்றும் சேவை திருப்தி என்பன அதிகரித்து ஊழியரின் ஊக்கம் அதிகரிக்கும். அவ்வாறே, இந்த அனைத்துப் பண்புகள் காரணமாகவும் சேவை நாடுநரின் செயற்றிறன் அதிகரிக்கும். அதற்கிணங்க, நிறுவனம் தனது சேவை நாடுநரின் பயிற்சித் தேவைக்கு ஏற்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல் அல்லது அவ்வாறான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ள நிறுவனங்களுக்கு தனது சேவை நாடுநர்களை அனுப்ப முடியும்.

மேலும், தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் காணப்படும் விசேட அறிவு மற்றும் ஆற்றல்களை ஏனையவர்களுடன் பகிர்ந்துகொள்ளும் சந்தர்ப்பமும் கிடைக்கின்றது. எனவே மொத்தச் செயன்முறையில் வினைத்திறனுள்ள மற்றும் அறிவாற்றல் மிக்க மனிதவளத்தை உருவாக்குவதற்கு உத்தேசிக்கப்படுகின்றது.

07 ஆம் அத்தியாயம்

இணக்க அறிக்கை

இலக்கம்	பயன்படுத்தப்படும் தேவைப்பாடுகள்	இணக்கத்தின் தன்மை (இணங்குகின்றது / இணங்கவில்லை)	இணங்கவில்லையாயின் அதற்கான சுருக்கமான விளக்கம்	எதிர்காலத்தில் இணங்காதிருப்பதனை தடுப்பதற்காக முன்வைக்கப்படும் துல்லியமான தீர்மானங்கள்/ நடவடிக்கைகள்
1	**கீழே குறிப்பிடப்படடுள்ள நிதிக் கூற்று/கணக்குகள் உரிய திகதியில் முன்வைக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதிக் கூற்று	இணக்கமானது		
1.2	அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு	இணக்கமானது		
1.3	வியாபாரம் மற்றும் உற்பத்தி முற்பனக் கணக்கு (வியாபார முற்பனக் கணக்கு)	-		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	-		
1.5	விஷேச முற்பணக் கணக்கு	-		
1.6	வேறு	-		
2	**புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பராமரித்தல் (நி.பி.445)**			
2.1	அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 267/2018 படி நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை இற்றைப்படுத்தி பேணிச்செல்லுதல்	இணக்கமானது		
2.2	ஆளுக்குரிய வேதனா திகள்பதிவேடு/ ஆளுக்குரிய வேதனாதிகள் அட்டை இற்றைப்படுத்தி பேணிச் செல்லுதல்	இணக்கமானது		
2.3	கணக்காய்வு விசாரணை பதிவேட்டினை இற்றைப்படுத்தி பேணிச் செல்லுதல்	இணக்கமானது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கை பதிவேட்டினை இற்றைப்படுத்தி பேணிச்செல்லுதல்	இணக்கமானது		
2.5	அனைத்து மாதாந்த கணக்குப் பொழிப்புகளும் (CIGAS) தயார்செய்யப்பட்டு குறித்த திகதியன்று திறைசேரிக்கு முன்வைத்தல்	இணக்கமானது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை ஏட்டினை இற்றைப்படுத்தி பேணிச்செல்லுதல்	இணக்கமானது		

2.7	பொருட் பதிவேட்டினை இற்றைப்படுத்தி பேணிச்செல்லுதல்	இணக்கமானது		
2.8	கையிருப்பு பதிவேட்டினை இற்றைப்படுத்தி பேணிச் செல்லுதல்	இணக்கமானது		
2.9	நட்டம் அல்லது இழப்புகள் பதிவேட்டினை இற்றைப்படுத்தி பேணிச்செல்லுதல்	இணக்கமானது		
2.10	பொறுப்புக்கள் பதிவேட்டினை இற்றைப்படுத்தி பேணிச் செல்லுதல்	இணக்கமானது		
2.11	அடியிதழ்சேர் புத்தகங்களின் பதிவேட்டினை (GA- N20) இற்றைப்படுத்தி பேணிச் செல்லுதல்	இணக்கமானது		
3	**நிதிக் கட்டுப்பட்டிற்காகக் கடமைகளைக் கையளித்தல் (நி.பி.135)**			
3.1	நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரத்தை நிறுவனத்திற்குள் கையளிப்புச் செய்திருந்தமை	இணக்கமானது		
3.2	நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரத்தை கையளித்தல் தொடர்பாக நிறுவனத்திற்கு அறிவுறுத்தல்	இணக்கமானது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு உத்தியோகத்தர்கள் அல்லது அதற்கு அதிகமான எண்ணிக்கையானவர்கள் ஊடாக அனுமதிக்கக் கூடியவாறு அதிகாரத்தைக் கையளித்திருத்தல்	இணக்கமானது		
3.4	2014.05.11 ஆம் திகதிய இலக்கம் 171/2004 உடைய அரச கணக்கு சுற்றறிக்கைக்கு ஏற்ப, அரச ஊதியங்கள் மென்பொருள் பெகேஜினை பயன்படுத்தும் போதுகணக்காளர்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் செயற்படுதல்	இணக்கமானது		
4	**வருடாந்த மதிப்பீட்டினை தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயல் திட்டத்தினை தயாரித்தல்	இணக்கமானது		
4.2	வருடாந்த கேள்வி நடைமுறை திட்டத்தினை தயாரித்தல்	இணக்கமானது		
4.3	வருடாந்த உள்ளகக் கணக்காய்வு திட்டத்தினை தயாரித்தல்	இணக்கமானது		
4.4	வருடாந்த மதிப்பீட்டினை தயார்செய்து தேசிய வரவு செலவு திணைக்களத்திற்கு (NBD) முன்வைத்திருத்தல்	இணக்கமானது		

4.5	வருடாந்த நிதிப் பாய்ச்சற் கூற்றினை குறித்த திகதியில் திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
5	**கணக்காய்வு விசாரணை**			
5.1	கணக்காய்வாளர் அதிபதியினால் குறிக்கப்பட்ட திகதியில், அனைத்து கணக்காய்வு விசாரணைகளுக்கும் விடையளித்திருத்தல்	இணக்கமானது		
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி.பி. 134(2) DMA/1-2019 ற்கு ஏற்ப, வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் அதிபதியுடன் உசாவியதன் பின்னர், உள்ளகக் கணக்குப் பரிசோதனை நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தல்	இணக்கமானது		
6.2	ஒவ்வொரு உள்ளகக் கணக்குப் பரிசோதனை அறிக்கைக்கும் ஒரு மாத காலத்திற்குள் விடையளித்திருத்தல்	இணக்கமானது		
6.3	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(4) உப அட்டவணையின் பிரகாரம், அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திற்கு முன்வைத்திருத்தல்	இணக்கமானது		
6.4	நிதிப் பிரமானம் 134(3) படி, அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைளினதும் பிரதிகள் கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்திருத்தல்	இணக்கமானது		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	DMA சுற்றறிக்கை 1 – 2019 படி, குறைந்த பட்சம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களாவது உரிய வருடத்திற்குள் நடாத்தியிருத்தல	இணக்கமானது		
8	**சொத்து முகாமைத்துவம்**			
8.1	01/2017இலக்கத்தையுடைய சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 வது அத்தியாயத்தின் படி சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் உபயோகம் தொடர்பான தகவல்களை கொம்ப்றோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு முன்வைத்தல்	இணக்கமானது		

8.2	மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 13 வது அத்தியாயத்தின் படி, அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதனை ஒருங்கிணைப்பு செய்வதற்குரிய தகுதியான ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் தொடர்பான தகவல் கொம்ப்றோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு முன்வைத்தல்	இணக்கமானது		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 05/2016 படி, இருப்பு சுற்றாய்வுகள் நடாத்தப்பட்டு உரிய அறிக்கைகள் குறித்த திகதிக்கு கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்தல்	இணக்கமானது		
8.4	வருடாந்த இருப்பு சுற்றாய்வில் கண்டறியப்படும் மேலதிகம், குறைவு மற்றும் ஏனைய பரிந்துரைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் மேற்கொண்டிருத்தல்	இணக்கமானது		
8.5	உபயோகிக்க முடியாத பொருட்களை அகற்றுவதற்கு நி.பி.772ன் படி செயற்படுதல்	இணக்கமானது		
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	இருக்கின்றவாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்டப் பதிவேடு மற்றும் மாதாந்த சாராம்ச அறிக்கை தயாரிக்கப்பட்டு குறித்த திகதியில் கணக்காய்வு அதிபதிக்கு முன்வைத்தல்	இணக்கமானது		
9.2	உபயோகப்படாத வாகனங்களை 06 மாதத்திற்கும் குறைவான காலப்பகுதியினுள் அகற்றியிருத்தல்	இணக்கமானது		
9.3	வாகனத்தின் லொக் புத்தகத்தை பேணிவருவதுடன் அவற்றை இற்றைப்படுத்தி பேணிவருதல் வேண்டும்	இணக்கமானது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பாக நி.பி.103, 104, 109 மற்றும் 110 படி நடவடிக்கை எடுத்தல்	இணக்கமானது		
9.5	2016.12.29 ஆம் திகதிய 2016/30ஆம் இலக்கத்தையுடைய அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம்,வாகனங்களில் எரிபொருள் தகனமடைவதனை மீள பரிசீலனை செய்தல்	இணக்கமானது		
9.6	குத்தகைக்கான கால வரையறையின் பின்னர் , குத்தகை வாகனங்களின் லொக் புத்தகங்களின் முழுமையான உரிமையினை கையகப்படுத்திக்கொள்ளல்.	இணக்கமானது		

10	**வங்கிக் கணக்கு முகாமைத்துவம்**			
10.1	குறிப்பிட்ட திகதியில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டு அவை முன்வைக்கப்பட்டிருத்தல்	இணக்கமானது		
10.2	மீளாய்வு வருடத்தில் அல்லது அதற்கு முன்னரான வருடங்களில் இருந்து முன் கொண்டு வருகின்ற செயற்படாத வங்கிக் கணக்குகள் தீர்க்கப்பட்டிருத்தல்	இணக்கமானது		
10.3	வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகளினால் வெளிப்படுத்தப்படும் மற்றும் இணங்கச் செய்ய வேண்டிய மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்திற்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அந்த மீதிகள் ஒரு மாத காலத்திற்குள் தீர்க்கப்பட்டிருத்தல்	இணக்கமானது		
11	**நிதி ஏற்பாடுகளின் பயன்கள்**			
11.1	வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளில் அவற்றின் எல்லையினை விஞ்சாதவாறு செலவுகளை மேற்கொள்ளுதல்	இணக்கமானது		
11.2	நி.பி. 94(1) ன் படி, வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தியதன் பின்னர் வருட இறுதியில் மிஞ்சுகின்ற நிதி ஏற்பாட்டு எல்லை மீறப்படாதவாறு பொறுப்பாக மாற்றுதல்	இணக்கமானது		
12	**அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	வரையறைக்கு உடன்படுதல்	இணக்கமானது		
12.2	கடன் இருப்பு மீதி தொடர்பான கால மீளாய்வொன்றை மேற்கொண்டிருத்தல்	இணக்கமானது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலதிக காலமாக காணப்படுகின்ற நிலுவையாக உள்ள கடன் மீதிகளை தீர்த்தல்	இணங்கவில்லை	தீர்க்கப்படாத கடன் மீதிகள் மற்றும் அதற்கான காரணங்கள் : **01. திரு. டி.எம்.ஆர். திஸாநாயக்க – அ.உ. ரூ.45,412.69 -** பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். இந்த உத்தியோகத்தர் பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2021.08.03 ஆம் திகதி வெளிநாடு சென்றுள்ளார். 2023.01.09 ஆம் திகதி அவரது மனைவி கடன் தொகையில் ஒரு பகுதியையும் வட்டியும் சேர்த்து ரூ.35,000.00	

			தொகையை செலுத்தியுள்ளார். 2023.12.31 ஆம் திகதியளவில் ரூ.45,412.69 மீதியை அறவிட வேண்டியுள்ளதனால் சட்டமா அதிபர் ஊடாக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கின் தற்போதைய நிலைமை பற்றி வினவி 2023.07.20, 2023.09.08, 2023.11.10 ஆம் திகதிகளில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. 2023.12.08 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் 2024.06.04 ஆம் திகதி அந்த வழக்கு மீண்டும் அழைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	இது கட்டுப்படுத்த முடியாத ஒரு நிலமையாகும்.
			02. திரு. பி.ரி.எஸ்.டி பீரிஸ் - அ.உ. ரூ.160,750.00 – பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். 2023.05.10 ஆம் திகதி முதல் பதவியை வெறிதாக்கியுள்ளவராக கருதி 2023.07.07 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. கடன் தொகையை பிணையாளரான புகையிரதத் திணைக்களத்தில் சேவையாற்றும் திரு. கே.ஜீ.டி. உபுல் ஷாந்த அவர்களின் சம்பளத்திலிருந்து அறவிட்டு அனுப்புமாறு 2023.11.22 ஆம் திகதி புகையிரதத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	இது கட்டுப்படுத்த முடியாத ஒரு நிலமையாகும்.
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலங்கடந்த வைப்பு தொடர்பாக நி.பி.571 ன் படி செயற்படுதல்	இணக்கமானது		
13.2	பொது வைப்பிற்குரிய கட்டுப்பாட்டு கணக்கினை இற்றைப்படுத்தி கொண்டு நடாத்துதல்	இணக்கமானது		
14	**கட்டுநிதிக் கணக்கு**			
14.1	மீளாய்வு வருட இறுதியில் காசேட்டின் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.	இணக்கமானது		
14.2	நி.பி. 371 ன் பிரகாரம் வழங்கப்பட்ட மறுவழங்கல்களுக்குரிய உப கட்டுநிதி, அச் செயற்பாடு பூர்த்தியாக்கப்பட்டவுடனேயே ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்படல் வேண்டும்	இணக்கமானது		

14.3	நி.பி. 371 ன் பிகாரம் அனுமதிக்கப்பட்ட எல்லையினை மீறாதவாறு மறுவழங்கலுக்குரிய உப கட்டுநிதி வழங்கப்பட்டிருத்தல்	இணக்கமானது		
14.4	கட்டுநிதி கணக்கு மீதி, திறைசேரியின் புத்தகங்களுடன் இணக்கமடைதல்	இணக்கமானது		
15	**வருமானக் கணக்கு**			
15.1	உரிய பிரமாணங்களுக்கு அமைய, சேகரிக்கப்பட்ட வருமானத்திலிருந்து மீள கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல்	இணக்கமானது		
15.2	சேகரிக்கப்பட்ட வருமானங்கள் வைப்புக் கணக்கிற்கு வரவு வைக்காது நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டிருத்தல்	இணக்கமானது		
15.3	நி.பி.176 ன் படி வருமான அறிக்கை கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்ஜ வக்கப்பட்டிருத்தல்	இணக்கமானது		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அனுமதிக்கப்பட்ட பணிக்குழாமின் எல்லைக்குள் பணிக் குழாம் எண்ணிக்கையினை கொண்டு நடாத்துதல்	இணக்கமானது		
16.2	பணிக் குழாமின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைப் பட்டியல் எழுத்துமூலம் வழங்கப்பட்டிருத்தல்	இணக்கமானது		
16.3	20.09.2017 ஆம் திகதிய MSD சுற்றறிக்கை இலக்கம் 04/2017 ன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்குமுன்வைக்கப்பட்டி ருத்தல்	இணக்கமானது		
17	பொது மக்களுக்கு தகவல்களை வழங்குதல்			
17.1	தகவல்கள் அறிந்துகொள்ளும் சட்டம் மற்றும் பிரமாணங்களின் படி தகவல் உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து தகவல்களை வழங்கும் பதிவேட்டினை இற்றைப்படுத்தி நடாத்திச் செல்லுதல்	இணக்கமானது		
17.2	நிறுவனம் தொடர்பான தகவல்களை அங்குள்ள இணையத்தளத்தின் ஊடாக அல்லது வேறு முறையூடாக கண்டறிந்து நிறுவனம் தொடர்பாக பொதுமக்களின் பாராட்டு/குற்றச்சாட்டுகளை தெரிவிப்பதற்கு வசதிகள் செய்து வைத்தல்	இணக்கமானது		

17.3	தகவல்களை அறிந்து கொள்ளும் சட்டத்தின் 08 வது மற்றும் 10வது பந்திகளின் படி வருடத்திற்கு இரண்டு முறை அல்லது வருடத்திற்கொருமுறை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணக்கமானது		
18	**பிரஜைகள் நியதிச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்**			
18.1	05/2008 மற்றும் 05/2008(1) இலக்கத்தையுடைய அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையின் படி பிரஜைகள்/ சேவைபெறுநர்கள் நியதிச் சட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல்	இணக்கமானது		
18.2	அந்த சுற்றறிக்கையின் 2.3 பந்தியின் பிரகாரம்,பிரஜைகள்/ சேவைபெறுநர்கள் நியதிச் சட்டத்தை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்துதலை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பிடுதலுக்காக நிறுவனத்தினால் நடைமுறையொன்றை தயாரித்தல்	இணக்கமானது		
19	மனித வள திட்டத்தை உருவாக்குதல்			
19.1	2018.01.24 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 ன் இணைப்பு 02 படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு மனித வள திட்டத்தினை தயாரித்தல்	இணக்கமானது		
19.2	பணிக்குழாமினரின் ஒவ்வொரு உறுப்பினருக்காகவும் வருடத்திற்கு குறைந்த பட்சம் 12 மணித்தியாளத்திற்கும் குறையாத பயிற்சிக்கான சந்தர்ப்பம் மேற்குறிப்பிட்ட மனித வள திட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்துதல்	இணக்கமானது		
19.3	மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் இலக்கம் 01ல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த பணிக்குழாமினருக்குரிய செயற்திறன் ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டிருத்தல்	இணக்கமானது		
19.4	மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்தியின் படி மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரித்தல், திறன் விருத்தி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அபிவிருத்தி செய்தல், திறன்கள் மேம்பாட்டு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான பொறுப்புக்களை கையளித்து சிரேஷ்ட உத்தயோகத்தர் ஒருவரைநியமித்தல்.	இணக்கமானது		

20	**கணக்காய்வு விசாரணைகளுக்கு பதிலளித்தல்**			
20.1	கடந்த வருடத்திற்காக கணக்காய்வாளர் அதிபதியினால் வழங்கப்பட்ட கணக்காய்வு பிரிவுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்திசெய்தல்	இணக்கமானது		